த. தே. க. 1/2

தமிழ்த் தேசியக் கட்சியின் கொள்கை முழக்கம்

[17—9—61ல் சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் நடைப்பெற்ற த. தே. க. முதல் மாநாட்டில் தோழர் த. தே. க. தலைவர் ஈ. வெ. கி. சம்பத், எம். பி. அவர்கள் ஆற்றிய தலைமைப் பேருரை.]

தமிழ்த் தேசியக் கட்சி
தலைமை நிலைய வெளியீடு
8, வடக்கு குளக்கரைத் தெரு
நுங்கம்பாக்கம்
சென்னை-34.

விலை புதிய காசுகள் 25

தமிழ்த் தேசியக் கட்சி மாநாட்டில்

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள்

தலைமை உரை

மாநாட்டு பிரதிநிதிகளே, கூடியுள்ள பெரு மக்களே, தாய் மார்களே, தோழர்களே சிறப்பு விருந்தினராயும் பார்வையாளராகவும் வந்திருக்கும் கணேசன் அவர்களே மராட்டிய உழவர் தொழிலாளர் கட்சியின் பிரதிநிதியும் சம்யுக்த மராட்டிய சமிதியின் செயலாளர்களில் ஒருவருமான தோழர் தேசாய் அவர்களே! உங்களுக்கு என் அன்பு கலந்த வணக்கம்.

மாநாட்டின் துவக்கத்தில் நண்பர்கள் வழிமொழிந்து பேச வேண்டும் என நான் விரும்பினேன் அதற்குக் காரணம், இந்தக் கட்சித் துவங்கி நான்கு மாதங்கள் தான் நிரம்பியுள்ளது. ஐந்து மாதங்கள் நிரம்பக்கூடிய தன்மையிலிருக்கின்றது என்றாலும் கட்சி எந்த அளவு விரிந்து பரந்து உள்ளது என்பதினை மாவட்ட பிரதிநிதிகளான அவர்களை அறிமுகப் படுத்துவதின் மூலம் அறிய முடியும் என்பதால் நான் அதனை விரும்பினேன்.

என்னுடைய நோக்கம் ஓரளவிற்கு ஈடேறிற்று: என்றாலும் எனக்குப் பிடிக்காத பல காரியங்கள் பல தொடர்ந்து நடைபெற்றதை நீங்கள் பார்த்தீர்கள்.

மகிழ்ச்சியும் அச்சமும்

ஆனால் வழிமொழிவது என்ற சம்பிரதாயத்தில் எப்படியும் தலைமையேற்பவரைப் பற்றி புகழ்ந்துரைப்

பது என்பது மரபாக இருந்து கொண்டு இருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில் நான் அதனை கேட்டுக் கொண்டிருந்ததில், ஒரு புறத்தில் நண்பர்களுடைய உள்ளத்திலே, நல்ல இடத்தைப் பெற்றிருக்கிறேன் என்பதை எண்ணும்போது நல்ல மகிழ்ச்சி யுண்டானாலும், அவர்கள் எந்த அளவிற்கு என்னிடத்தில் எதிர் பார்க்கின்றார் ள் என்பதை மற்றொரு புறத்தில் தொகுத்து வைத்துப் பார்க்கும்போது எனக்கு ஒரு பக்கம் அச்சமும், உண்டாகிறது.

இவ்வளவு பொறுப்புகளை இங்கே நிறைவேற்ற வேண்டும் என்பதற்கு என்னை நண்பர்கள் மிக அதிகமாக எதிர்பார்க்கின்றார்கள் என்பதை அவர்கள் இங்கு வெளியிட்டிருக்கின்றார்கள். அது அன்பின் பெருக்காலும், தோழமை உணர்ச்சியாலும் அவர்கள் எடுத்துரைத்தது என்று நான் கொண்டு—என்னுடைய பணியின் தன்மையிலே அவர்கள் எந்த அளவிற்கு எதிர் பார்க்கின்றார்கள் என்பதை குறிப்பாக நான் உணர்ந்து கொள்வதற்கு உதவியது என்று கொண்டு நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநாட்டில் புதுமை!

இந்த மாநாட்டைப் பற்றி நான் துவக்கத்திலேயே சொல்ல வேண்டும் என்று விரும்பியது என்ன வென்றால் இந்த மாநாடு நடைபெற்ற முறை, பலபேருக்கு புதுமையாகத் தெரிந்திருக்கின்றது. காரணம் தமிழ்த் தேசீயக் கட்சி மாநாட்டு வரவேற்பு குழு அமைக்கப்பட்டு அந்த வரவேற்புக்குழு ‘முதல்நாள் முத்தமிழ் மாநாட்டினையும் இரண்டாம்நாள் சாதி ஒழிப்பு மாநாட்டினையும் நடத்த வேண்டும் என்று முடிவு செய்தது.

இந்த இரண்டு மாநாடுகளிலேயும் த. தே க. தோழர்கள் தங்கள் கருத்துக்களைக் அடக்கமாக சற்

றுக் குறைத்துக் கொண்டு, இந்த நாட்டில் உள்ள பல்வேறு கட்சிகளிலே பணியாற்றுகின்ற பெருந் தலைவர்கள், பல்வேறு துறைகளிலே தங்களுடைய திறமையாலும், தொண்டாலும், சிறந்து உயர்ந்து விளங்குகின்ற தலைவர்களை அழைத்துவந்து அவர்களுடைய கருத்துக்களை நீங்கள் கேட்பதற்கான வாய்ப்பை உண்டாக்கிக் கொடுத்தார்கள்.

நம்முடைய துணிச்சல்

இந்த இரண்டு மாநாடுகளையும் ஒரு கட்சி கூட்டுவதற்கு அதிகமான துணிச்சல் வேண்டுமென்று பல அரசியல்கட்சித்தலைவர்களும் என்னிடத்தில்வேடிக்கையாக குறிப்பிட்டார்கள். துணிச்சல் வேண்டும் என்று சொல்கிறீர்களே எதனுல்'' என்று நான் கேட்டேன். ஒரு பெரிய கட்சியைச் சார்ந்தவர் சொன்னுர்: சாதரணமாக அரசியல் கட்சிகள் தாங்கள் சிரமப்பட்டு கூட்டுகின்ற மக்களுக்கு மத்தியில் வேறு கட்சிக்காரர்களை அறிமுகப்படுத்துவதற்கு மிகவும் பயப்படுவார்கள். அவர்களுடைய கருத்துக்களை கேட்டு அவர்களுக்குப் பின்னுல் மக்கள் போய் விடுவார்கள் என்று பயந்து கூட்டுகின்றகூட்டத்தை குதிரைக்கு முகப்பட்டிபோடுவதைப் போல, அந்தப் பக்கம், இந்தப்பக்கம் பார்க்காமலேயே அழைத்து செல்கின்ற வரையில் தங்கள் ஆதிக்கம் தங்கும் என்ற கருத்திலே மற்றவர்கள் நடந்து கொள்வார்கள். நீங்கள் எடுத்த எடுப்பிலேயே இந்த துணிச்சலைக் காட்டுகின்றீர்கள்''என்று சொன்னுர்கள்.

நான் அவருக்கு எடுத்துச் சொன்னேன், 'எங்களுடைய கட்சி,' எங்களுடைய கட்சிக்கு என்று ஒரு கூட்டம் இருக்க வேண்டும் என்று ஆரம்பிக்கப் பட்டதல்ல. நாட்டிலே சில பல நல்ல காரியங்கள் நடைபெற வேண்டும். நாட்டிலே இருக்கின்ற பல்வேறு அரசியல் பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வு ஏற்பட்டு நாட்டு வாழ்வில் நலனும், மக்களுடைய அரசியல் வாழ்வில் உரிமையும் பெருக வேண்டும் என்ற நோக்கத்தினை நாங்கள்

கொண்டிருக்கின்றோம். ஆக எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துக் கொள்கின்ற சில பல பிரச்சினைப் பற்றி பொதுமக்கள் முன்னிலையில் நம்முடைய மேடையில் பேசுவதை நாங்கள் எங்களுடைய கட்சிக்கு கிடைக்கின்ற ஆக்கமாகக் கொள்வோம். அதைக்கண்டு நாங்கள் அஞ்சவோ ஐயப்படவோ, இல்லை.

எங்கள் சுபாவம்

எங்களுடைய சுபாவம் அப்படிப்பட்டது அல்ல!' என்று அவருக்கு எடுத்துச் சொன்னேன்.

அவர் கூடச் சொன்னார் "அதுதான் சரி. அதனால் கட்சிக்கு எந்தவிதமான ஊறும் ஏற்படாது. மற்றவர்களும் அதனைப் பின்பற்றவேண்டும். எங்களுடைய கட்சிகளிலே இந்த யோசனையை ஏற்று நடத்துவார்களேயானால் நீங்கள் வந்து கலந்து கொள்வீர்களா" என்று அவர் உரிமையுடனும் ஆசையுடனும் கேட்டார்.

அதே போல் திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் சாதி ஒழிப்பு மாநாடு நடந்து கொண்டிருக்கும் போது என்னிடத்தில் சொன்னார். இனி நான் அருள் நெறி திருக்கூட்ட மாநாடு போட்டாலும் உங்களையெல்லாம் அழைத்து பேசக்கூடிய மாநாடாகக் கூட்டப் போகின்றேன். அது சாதி ஒழிப்பு மாநாடாக இருக்கும்' என்று எடுத்துச் சொன்னார்கள்.

இதை நான் இங்கு ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், தி. மு. க செய்திருக்கின்ற சில சாதனைகளில் அதுவும் ஒன்று என்று நான் கருதுன்றேன்.

தேர்தல் கூட்டு

தேர்தல் நேரத்தில் மட்டும், தேர்தலுக்காக மட்டும், அதிலே உள்ளேயும் குடைந்து பார்த்தால் தேர்தலிலே அந்த குறிபிட்ட கட்சிக்கு புதிய வாய்ப்பு

கிடைக்க வேண்டும் என்பதற்காக மட்டும் பலருக்கு கூட்டுச்சேர வேண்டும் என்ற துடிப்பு இருக்கும். ஆனால் சாதாரணமான நேரங்களில் சில பிரச்சினைகளை முன்னிட்டு கட்சியினுடைய லாப நஷ்டத்தினைப் பாராமல், நாட்டினுடைய லாப நஷ்டத்தினை மட்டும் கணக்கிட்டுப் பார்த்து எல்லோருடனும் மனம் விட்டு தாராளமாக தைரியமாக கட்சி மனப்பான்மையில்லாமல்சேர்ந்துஎல்லோருடைய கூட்டுச்சிந்தனை, எல்லோருடைய கூட்டு அறிவு, எல்லோருடைய கூட்டு முயற்சி எல்லோருடைய கூட்டு உழைப்பு இவைகளை வைத்து இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்ற எண்ணம் சரிவர இல்லாமலிருந்த இந்த நாட்டில், த. தே. க. இன்றைக்கு முதன் முதலாக செய்த பரிசோதனையிலே எந்த அளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறது என்றால், அதை தொடர்ந்து எல்லாக் கட்சிகளும் இனிமேல் இப்படிப்பட்ட ஏற்பாடுகளை செய்யத் தக்க சூழ்நிலையை வெற்றிகரமாக ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது'' இதில் நீங்களும் நானும் பெருமை படுவதற்கு நிறைய இடம் இருக்கின்றது.

தப்பிப்பிழைக்குமா?

அடுத்தாற்போல் நான் சொல்லுவேன் கட்சி ஆரம்பித்து மாதங்கள் ஐந்து தான் ஆகின்றன என்ற நிலையில் நாம் இருக்கின்றோம். 1961ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம் தேதி புயலும் கருமேகங்களும் சூழ்ந்திருந்தநிலையில் கட்சியை ஆரம்பித்தோம். நல்ல உள்ளம் படைத்தவர்களும் நாம் வாழவேண்டும் என்று மனமார நினைப்பவர்கள் மட்டுமேகூட எண்ணித் துணுக்குற்றிருக்கின்றார்கள் இந்தக் காரியம் வெற்றிபெறுமா? இவர்கள் தப்பிப் பிழைக்க முடியுமா? இந்தக் காலித்தனமான கலவர ஆர்ப்பாட்டங்களுக்கிடையில், இவர்களுடைய நல்ல பேச்சுக்கள், நாட்டிலே எடுபடுமா? நாட்டு மக்களுடைய செவிகளிலே விழுகின்ற வாய்ப்பாவது கிட்டுமா? என்று பலபேர் உள்ளம் நைந்து இருக்கின்றார்கள்.

அதே போல் சாதாரணமான சூழ்நிலையில் உள்ள பலர் இது ஒன்றும் நடைபெறுததல்ல. இரண்டு நாள் அல்லது மூன்று நாள் நடந்து விசித்திரமாக முடிந்து விடும் என்று உள்ளபடியே கருதினார்கள்.

நம்முடைய வெற்றி

ஆனால் இன்றைய தினம் நாம் இந்த நாட்டிலே நிலைபெற்றுவிட்ட கட்சியாக மாறிவிட்டோம் என்பது மட்டுமல்ல; பல பேர்களுடைய உள்ளங்களிலுமே புதிய நம்பிக்கையை உருவாக்கக்கூடிய வாய்ப்பு பெற்ற ஒரு கட்சியாகவும் பல நல்லவர்க்ள், பல பெரியவர்கள், பல்வேறு துறைகளிலே சிறப்புப் பெற்று உயர்ந்து விளங்கக்கூடியவர்கள் பலருடைய நல்லெண்ணத்தையும் நல் வாழ்த்துக்களையும் நம்பிக்கையினையும் பெற்றிருக்கின்ற ஒரு கட்சியாக நாம் திகழ்கின்றோம். இதை எண்ணும்போது, உள்ளத் தூய்மைக்கும் நாணயத் திற்கும் பொது வாழ்க்கையில் எந்த அளவிற்கு வெற்றி கிடைக்கும் என்ற உண்மை நமக்கு மிக நன்றாகத் தெரிகின்றது.

பயந்தோம். ஆனால் !

முத்தமிழ் மாநாட்டை கூட்டும்போதும் கூட நாங்கள் பயந்து பயந்து கூட்டினோம். ஏன் என்றால் முத்தமிழ் மாநாட்டில் பல்வேறு தலைவர்களை நாம் அழைக்கின்றோம் பல்வேறு துறைகளிலே பணியாற்றுகின்ற புலவர்களை நாம் அழைத்துக் கொண்டு வருகின்றோம். அவர்கள் இங்கு பேசும்போது கட்சி சார்பற்ற மாநாடு என்று சொன்னாலும்கூட கட்சிக்கு ஆக்கம்தேட எண்ணி எங்கே ஏதாவது சுடு சொல் சொல்லி நம்முடைய உள்ளத்தை வருத்திவிடுவார்களோ என்றும் எங்கே நம் நல்லெண்ணத்தை சந்தேகித்து விடுவார்களோ என்றும் நாங்கள் மிகவும் பயந்தோம்.

ஆனால் மேடையில் இருந்த தலைவர்கள் வெளிப்படையாக உங்கள் மத்தியில் பேசும்போதும், தனிப்

படையாக என்னிடத்திலே பேசும்போதும், நீங்கள் இவ்வளவு தூரம் பாதுகாப்பு காட்டத் தேவையில்லை, தமிழ் தேசியம் என்றால் அது என்ன எங்களுக்கு வேம்பா? தமிழ் தேசியம் என்றால் அதுவளரவேண்டிய ஒன்றுதானே? தமிழ் தன்னாட்சிக்குத் தமிழன் யார் விரோதமாக இருக்கமுடியும்? ஏன் முத்தமிழ் மாநாட்டை அரசியல் சார்பற்ற மாநாடு என்று போட்டீர்கள்? என்று என்னைச் செல்லமாக சினந்து கொண்டார்கள்.

குறைகூற முடியவில்லை

தவிர நம்முடைய நோக்கத்தைச் சந்தேகித்து 'கட்சிக்குப் பலம் சேர்பதற்காகத்தான் இப்படி மாநாடு கூட்டப்படுவதாக என்று ஜாடைமாடையாகத் கூட யாரும் கூறவில்லை. முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் என்றைக்கும் தன்னுடைய உள்ளத்திலேதோன்றுகின்ற எதனையும் எவ்வளவு பெரியவரை தாக்கக்கூடிய வார்த்தையாக இருந்தாலும் துணிந்து சொல்லக்கூடிய சுபாவத்தைப் பெற்றவர்; இங்கே உங்கள் முன்னிலையில் பேசும் போது "முத்தமிழ் மாநாடு அரசியல் சார்பற்ற மாநாடு என்று ஏன் போடவேண்டும். முத்தமிழ் பேசுவது அரசியல்தான், மொழி காக்கப் பாடுபடுவது அரசியல்தான், இதையே அரசியல் மாநாடாகக் கொள்ளவேண்டும்" என்று அவர்கள் நம்மிடத்தில் வாதிட்டார்கள்.

குன்றக்குடி அடிகளார்கூட என்னிடத்தில் பேசும் போது, "நீங்கள் இப்படி ஒவ்வொருவருக்கும் தலைப்பே கொடுக்காமல் பேசச் சொன்னீர்களே! ஒவ்வொருவருக்கும் தலைப்புக் கொடுத்திருக்கவேண்டும், ஒருவருக்கு "இலக்கியத்தில் பணி." "தமிழ் தேசியத்தில் தமிழ் இசை," "தமிழ்த் தேசியம்" என்று கொடுத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!" என்று அவர்கள் என்னிடத்தில் கூறினார்கள்.

அனாதைகளாக்க முயற்சி!

இவைகளையெல்லாம் நான் உங்களிடத்தில் தொகுத்துக் கூறுவதற்கு காரணம், துவக்கத்தில் நாங்கள் ஏதோ அனாதைகளாக இருக்கின்றோம் என்ற எண்ணத்தை உண்டாக்குவதற்கு பல சூழ்நிலைகளை பலர் வாய்ப்பாக ஏற்படுத்த முயன்றார்கள்,

இன்றைய தினம் நாட்டிற்குள் இருக்கின்ற பல பெரியவர்கள் எங்களை அணைத்துச் சீராட்டி நாங்கள் வளரவேண்டும், எங்கள் மூலமாக இந்த அமைப்பின் மூலமாக தமிழ் நாட்டிற்குப் பல நல்ல நிலைகள் ஏற்பட வேண்டும் என்று மனமார விரும்புகின்றார்கள் என்பதை இரண்டு நாள் மாநாட்டிலும் நீங்கள் கண்டிருக்கின்றீர்கள்,

நேற்றைய தினம் நடைபெற்றது சாதி ஒழிப்பு மாநாடு.

ஒரு அம்சத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், அந்த மாநாடு முடிகின்ற வரையில் உள்ளபடியே என்னுடைய உள்ளத்திலே மன நிம்மதியில்லை.

என்னவென்றால் அந்த மாநாட்டிற்கு எல்லாக் கட்சி பிரதிநிதிகளையும் நாங்கள் அழைத்து இருந்தோம். எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். இரண்டு கட்சிப் பிரதிநிதிகள் தான் வரமுடியவில்லை. தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்தவர்களும். நாம் தமிழர் இயக்கத்தினைச் சார்ந்தவர்களும் வருவதற்கு விருப்பம் இருந்தாலும் ஏற்கெனவே வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து இருந்ததால் வருவதற்கு இல்லையென்று வருத்தம் தெரிவித்து இருந்தார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்த்து நமக்கு கிடைத்து இருக்கிறது.

மற்ற எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளும் வந்து இருந்தார்கள். சாதி ஒழியவேண்டும் என்பதிலே எல்லோ

ருக்கும் அபிப்பிராயம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும்,

ஆனால் சாதி ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் வழி தான் ஒன்றிலிருந்து மற்றொன்று மாறுபட்டதாக இருந்தது. சாதிகளுக்கு எது காரணம்?

அதேபோல சாதி வேறுபாடுகளுக்கு எது காரணம் என்ற ஆராய்ச்சியிலேயும் மிகக் கடுமையான வேறுபாடுகளும் முரண்பாடுகளும் இருந்தன, என்பதும் எங்களுக்குத் தெரியும். அந்த மோதுதல் எங்கே குழப்பத்தை உண்டாக்கி, இந்த மேடையினுடைய எழிலைக் கூடக் கெடுத்து விடுமோ என்று நாங்கள் வெகுவாக அஞ்சிக் கொண்டிருந்தோம். ஆனால் நேற்றைய தினம் நடைபெற்ற மாநாடு, பெரியார் அவர்கள் பேச்சைக் கூட செரிமானம் செய்யக் கூடிய நல்ல ஆரோக்கியமான மேடையாயிருந்தது கண்டு உள்ளபடியே நாங்கள் பெருமைப்பட்டோம்.

புது நம்பிக்கை - உற்சாகம்!

ஏன் நான் பெரியார் அவர்கள் பேச்சைக் கூட என்று சொல்லுகின்றேன் என்றால் அவர் பொதுவாகவே தமிழகத்தில், வேறு எத்தனையோ பெருமைகளுக்கு உரியவர் என்றாலும் தன்னுடைய உள்ளத்தில் தோன்றுகின்ற எந்தக் கருத்தினையும் எடுத்துச் சொல்லும்போது எவருடைய உள்ளம்நோகும், நோகாது என்பதைப் பற்றிக் கவலைப் படாமல், தன்னுடைய உள்ளத்தில் தோன்றுகிற எண்ணம் உருவாகும் போது எவ்வளவு முரட்டுத்தனமான வார்த்தைகளிலே ஓடுகின்றனவோ அது கொஞ்சமும் முனை மழுங்காமல், அப்படியே எடுத்துச் சொல்லும் தனிப் பெருமைக்கு உரியவர். அதைக் கண்டு ரசிக்கத் தக்க பேராற்றல் படைத்தவர்களும், அதைப் பெருமையாக கருதத்தக்க பக்குவம் பெற்றவர்களும், நிறைய உண்டு என்றாலும் இங்கே இப்படிப் பட்ட மேடையில் அந்த க் 'கருத்து என்று எடுத்துக் கொள்ளாமல், அந்த 'வார்த்தை

என்று எடுத்துக்கொண்டுமற்றகட்சியினர்கள், வருந்துவார்களோ என்ற அச்சம் இருந்தது ஆனல் எல்லோருமே அவருடைய கருத்து என்ன என்பதை அறிவதிலே மிகப் பொறுப்பான ஆவலைக் காட்டினுர்கள். அதைப்பற்றி சிந்திக்கின்ற ஆயத்தத்தையும் அவர்கள் காட்டினுர்கள். இந்த வகையில் நேற்றைய மாநாடு, மிகப் பெரிய வெற்றியானது மட்டுமின்றி, எல்லோருடைய உள்ளத்திலேயும் இப்படிப்பட்ட சாதி ஒழிப்பு மாநாடு, எல்லாத் தலைவர்களையும் எல்லாத் துறையிலிருப்பவர்களையும் எடுத்துக்கொண்டு வந்து நடத்துகிற மாநாடு எங்கு பார்த்தாலும் தொடர்ந்து நடைபெற வேண்டும், இப்படித் தொடர்ந்து நடைபெறுமேயாணுல் சாதிச் சனியனை இந்நாட்டிலேயிருந்து விரட்டுவதற்கான தகுதியான வழி நமக்குக் கிடைக்கும் என்று புதிய நம்பிக்கை, புதிய உற்சாகம் எல்லோருடைய உள்ளங்களிலேயும் ஏற்பட்டிருக்கிறது

சிறப்பு விருந்தினர்!

இன்றைய தினம் நாங்கள் கூட்டியிருக்கின்ற இந்த அரசியல் மாநாடு—இந்த மாநாட்டில் தாங்கள் செய்திருக்கின்ற ஏற்பாடு என்னவென்ருல், பார்வையாளர்கள் இல்லாமல், மூன்று நாட்கள், பிரதிநிதிகள் மட்டுமே கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிருர்கள்; அவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று ஆசைப்பட்ட அத்தனை தீர்மானங்களையும் நிறைவேற்ற முடியவில்லை; இன்னும் ஓரளவுக்குச் சொல்ல வேண்டுமென்ருல் மிக முக்கியமான தீர்மானங்களிலே மட்டும் மிக நீண்ட நேரம் விவாதம் நடைபெற்று, இங்கேயும் மக்கள் வந்து விட்டார்கள்.

அங்கேயும் சில தீர்மானங்கள் பாக்கியிருக்கின்றன. இந்த நெருக்கடியிலே சில தீர்மானங்களை பார்லிமெண்டரி மொழியிலே சொல்லுவார்களே. 'கில்லட்டினர்' என்று, அதைப்போல விவாதத்தைச் சுருக்கி தீர்மானங்களை நிறைவேற்றி இங்கே கொண்டு

வந்து வைத்திருக்கிறோம். அந்தத் தீர்மானங்களை இங்கே உங்களுக்கு நானும் எனது தோழர்களுமாக சுருக்கமான முறையில் விளக்கி அறிவிக்க இருக்கின்றோம்.அதுதான் இன்றைய மாநாட்டினுடைய நிகழ்ச்சி நிரலாகும். இங்கே நடைபெறவிருக்கிற இரண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் என்னவென்றால் இங்கு சிறப்பு விருந்தினர்களாக வந்திருக்கின்ற இரண்டு நல்ல நண்பர்கள் சிறப்பு உரையாற்ற இருக்கின்றார்கள். என்னுடைய தலைமை உரை முடிந்ததற்குப் பிறகு ஒருவர் மராட்டிய உழவர் தொழிலாளர் கட்சியினுடைய செயலாளர் — சம்யுக்த மராட்டிய சமிதியில் செயலாளராகப் பணிபுரிகின்றவரும் டெல்லி மேல்சபையில் பாராளுமன்ற உறுப்பினராகப் பணிபுரிகிறவருமான பெருமதிப்பிற்குரிய திரு. தேசாய் அவர்களாவர், இந்த மாநாட்டிற்கு அவர் வருவார் என்று விளம்பரம் நாங்கள் செய்யவில்லை. காரணம் என்னவென்றால், அவர்கள் வருவது உறுதியாக நமக்குத் தெரியவில்லை.

முக்கியமான உரை!

அவர்களுக்கும் பல்வேறு அலுவல்கள் குவிந்துவிட்ட காரணத்தினால் சரியான முறையில் தொடர்பு கொள்ள முடியாததினால் அவர்கள் வருகின்ற விவரம் எங்களுக்குக் கடைசி வரையில் கிடைக்கவில்லை. ஆகவே கிடைக்காத நிலையில் விளம்பரப்படுத்தி அவர்கள் ஒருவேளை வாராமல் போய்விட்டால், இங்கே எதையும் எடுத்து வைத்துக் கொண்டு துரும்பைத் தூணுக்கிக் கொண்டிருக்கிற நண்பர்கள், பார்த்தீர்களா! பார்த்திர்களா! என்று ஒப்பாரி வைப்பார்கள் என்ற கருத்தில், அவர்கள் வந்ததற்குப்பின்னாலே விளம்பரப்படுத்தினால்போதும் என்றிருந்தோம் நாங்கள் அந்தப் பெரிதாக விளம்பரப்படுத்தவில்லை. விளம்பரப் படுத்தியிருந்தால் அதை ஒட்டி ஒரு சிறு பரபரப்பு ஏற்பட்டிருக்கக்கூடும். இருந்தாலும், நாம் எல்லாம் பெருமளவு மகிழ்ச்சி கொள்ளத் தக்க வகையில் அவர்கள் இந்த மாநாட்டிலே கலந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள்

இங்கே உரையாற்றவிருக்கிருர்கள். அடுத்து நம்முடைய நண்பர் சிவாஜி கணேசன் அவர்கள் இங்கே பேசுவது பற்றி, எங்களுடைய பிரதிநிதிகள் மாநாட்டிலே நாங்கள் விவாதித்து முடிவு செய்தாம். இதைச் சொல்லும்போது, நீங்களும், அவர்களும். எங்களுடைய கட்சியைப் பற்றிப் பெருமைப் படுவீர்கள் என்று நாங்கள் கருதுகிறோம். எதையும் நாங்கள் சாதாரணமாகச் செய்வது என்ற பழக்கத்தை வைத்துக் கொள்ளாமல் விவாதித்துச் சொல்வது என்ற முடிவினை நாங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம். காரணம் நாங்கள் முத்தமிழ் மாநாட்டிற்கு அவரை அழைத்திருந்தோம். அவர்களும் பெரிதும் விரும்பி அந்த மாநாட்டிற்கு வந்திருந்தார்கள். ஆனல் அந்த மாநாட்டிற்கு அவர்கள் தன்னுடைய உரையை நிகழ்த்த முடியாமல் இடையில் இயற்கை தொல்லை விளைவித்துவிட்டது. இன்றையத் தினம் அவர்கள் இதர நிகழ்ச்சிகள் தொடங்குவதற்கு முன்பாக, தன்னுடைய அரிய உரையை அதுவும் நம்முடைய கட்சிக்கு மிகவும் முக்கியமான உரை என்று கருதுகின்ற உரையை நிகழ்த்தவிருக்கின்ருர்கள்.

அரசியலும் கலையும்!

ஏனென்ருல், அரசியலுக்கும், கலைக்கும் எந்த மாதிரியான தொடர்பு இருக்கவேண்டும் என்பது இன்று பெரும் பிரச்சினையாயிருக்கிறது. கலை உலகத்தில் இயற்கையான ஒரு பிரச்சினை, ஆனுல் அரசியல் உலகில் அது ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக ஆக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பிரச்சினையைப் பற்றிக் கருத்துக்களைச் சொல்லும் போது எவ்வளவு நல்ல உள்ளத்தோடு இந்தத் தரப்பிலே சொன்னுலும், அந்தத் தரப்பிலே சொன்னுலும், உடனே அந்தத் தரப்பிலே சென்று அதனை முட்டி விடுவதற்கென்று பல சக்திகள் இருந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், நாங்கள் மட்டும் எங்கள் கட்சியில் கலைஞர்களுக்கும் அரசியலுக்கும் இருக்கவேண்டிய தொடர்பை உறவைப்பற்றிப்

பேசிக் கொண்டிருப்பதினுலே சில மனமாச்சரியங்கள் ஏற்படுவதற்கான முயற்சிகள் நடந்து இருப்பதை உணர்ந்தும் ஆக இப்படிப்பட்ட நேரத்தில் இந்த மேடையில் அந்த உரை நிகழ்த்தப்படுவது அந்தப் பேராபத்தினின்றும் நம்மைக் காத்துக் கொள்வதற்குத் துணைபுரியும் என்ற கருத்தில் அவர்களுடைய வருகையும், அவர்கள் ஆற்றவிருக்கும் உரையும் நமக்கு ஒரு சிறந்த வாய்ப்பாக நாங்கள் கருதிக்கொண்டிருக்கிறோம்.

அதற்கடுத்தாற்போல நம்முடைய தோழர்கள் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை உங்களுடைய முன்னிலையில் விளக்கி அறிவிக்க இருக்கின்றார்கள்.

நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் அரசியல் தீர்மானம்பற்றி மட்டும் இங்கே என்னுடைய முன்னுரையில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அந்த தீர்மானம் எதுவாக இருக்கும் என்று அநேகமாக உங்களில் பலர் யூகிக்க முடியும் என்று கருதுகின்றேன். கட்சியினுடைய மிக முக்கியமான, அரசியல் குறிக்கோளான, தமிழகத் தன்னாட்சியைக் காண்பது என்ற அந்தக் குறிக்கோளைப் பற்றியும், அந்தக் குறிக்கோளுக்கான அடிப்படை வரலாற்றுப் பின்னணியும், அடிப்படை தேசிய உணர்ச்சியைப் பற்றியும் விளக்கிக் காட்டுகின்ற அரசியல் தீர்மானமாக அது உருப்பெற்றிருக்கின்றது!

சொன்னதைச் 'செய்கிறோம்

சென்னையில் நடைபெற்ற பல பொதுக் கூட்டங்களில் நானும்என்னுடையகட்சித்தோழர்களும் அடிக்கடி விளக்கிக் காட்டிவந்திருக்கின்றோம். ஒவ்வொரு ஊர்களுக்குச் செல்கின்ற நேரத்தில் எல்லாம் அதனை விளக்கிக்கொண்டிருக்கின்றோம். கடந்த நான்கு மாதப் பத்திரிகைகளில் மிக நன்றாக விளக்கப்பட்டு இருக்கின்றது. அதைத்தான் தீர்மானம் வடிவத்தில் அரசியல் தீர்மானம் என்ற பெயரால் இங்கே வடித்திருக்கின்றோம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் வெள்ளையன் வெளியேறி ஆண்டுகள் பதினன்கு ஆனாலும் இந்த பதினன்கு ஆண்டுகளிலேயும் ஏற்பட்டுவிட்ட பல்வேறு அரசியல் கொந்தளிப்புகள் அத்தனையும் ஒரு குறிப்பிட்ட பாணியினை வந்து அடைந்து இருக்கின்றதைக் காண்கின்றோம். மொழி வழி மாநிலங்களைக் கோரி நடைபெற்ற கிளர்ச்சிகளிலிருந்து இன்றைக்கு நடைபெறுகின்ற அசாம் கிளர்ச்சிகளைப் போன்ற பல்வேறு விதமான நிகழ்ச்சிகள் அத்தனையும் தொகுத்து வைத்து உட்கார்ந்து ஆராய்ந்து பார்த்தால் இத்தனைக்கும் பின்னால் இருக்கின்ற ஒரு பெரிய அரசியல் மனக்குறை தெரிகின்றது.

உண்மையைச் சொல்லும் துணிச்சல்

அது என்ன என்று ஆராய்வதற்கே சற்று துணிச்சல் அகில இந்தியாவில் உள்ள பொறுப்புள்ள பெரிய தலைவர்கள் பெறுவதால்தான்,—பெற்றதற்குப் பிறகு ஆராய்ந்து கண்டறிந்த உண்மையை துணிச்சலோடு எடுத்து வைக்கின்ற அந்த நாணயத்தை பெற்றால் தான்—நிச்சயமாக இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வு கிடைக்கும், என்று கட்சி கருது கின்றது.

வெள்ளையருக்குப் பிறகு...!

1947–ம் ஆண்டுக்கு முன்பு இரண்டு அல்லது இரண்டரை நூற்றாண்டுகளுக்கு வெள்ளையனின் ஆட்சி இந்தியாவில் நடைபெற்று இருக்கிறது. ஆட்சி நடை பெறுவதற்கு முன்னாலே வெள்ளையன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக இந்தியத் துணைக் கண்டத்திலிருந்த பல்வேறு நாடுகளையும் ஒன்றன்பின் ஒன்றாக பிடித்து ஒன்றன்பின் ஒன்றாக வென்று அத்தனையும் கூட்டி ஒரு குறிப்பிட்ட ஆட்சியின்கீழ் கொண்டுவந்து நிறுத்தினான். ஒரு குறிப்பிட்ட சட்டத்திற்கு உட்பட்ட ஆட்சியாக அந்த பெரும் நிலப்பரப்பு சுருக்கமாக்கிய பல்வேறு நாடுகளையும் அடக்கிக் கொண்டு வந்தான்.

அதனுல் இரண்டு அல்லது இரண்டரை நூற்ருண்டுகளாக ஒரு உறவு—ஒரு புதுமாதிரியான அரசியல் உறவு, வரலாறு ண்டிராத அரசியல் உறவு, இந்தியாவின் பல்வேறு நாடுகளுக்கிடையேயும் ஏற்பட்டு வளர்ச்சியடைந்தது. பல்வேறு பகுதிகளிலேயும் வெள்ளையன் வெளியேற வேண்டும், வெள்ளையன் வெளியேறினுல் நமக்கு அரசியல் சுதந்திரம் கிடைக்கும், வெள்ளையன் வெளியேற்றத்தில் தான் நம்முடைய சுதந்திரம் இருக்கின்றது என்று மக்கள் எண்ணத் தலைப்பட்டார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தில் அப்பொழுது உதித்த பல்வேறு பெருந் தலைவர்கள் இன்றைக்கு இருக்கிற பல தலைவர்களைவிட அறிவிலேயும் ஆற்றலிலேயும், தொண்டிலேயும், தியாக சுபாவத்திலேயும் கல்வியிலுயும் மேம்பட்டு விளங்கிய பல்வேறு தலைவர்கள் வெள்ளையன் வெளியேற வேண்டும் என்ற இந்த பெரும் எண்ணம் அப்படியே இந்திய தேசியமாக உருவாகி விடவேண்டும் என்று பெரிதும் ஆசைப்பட்டார்கள் விரும்பினுர்கள்.

ஆனுல் 1947-ல் வெள்ளையன் வெளியேறிய பிறகு இந்த ஆசை நிறைவேறவில்லை என்பது தெளிவாக தெரிந்தது. அதைத்தான் நேற்று முன் தினம் பேசிய கம்யூனிஸ்டு கட்சித் தோழர் ஜீவானந்தம் சொன்னுர்கள். 1947 க்கு முன்பு இருந்த தேசியம் பழைய தேசியம். அது இந்திய தேசியம் 1947க்குப்பிறகு ஏற்பட்டுள்ளது. புதிய தேசியம் அது மொழி வழி தேசியம் என்ற இதே உண்மையை அவர்களுடைய கட்சி மொழியிலே சொன்னுர்கள். ஆனுல் நிலையில் ஒன்றும் பேதமில்லை.

தேசாயைப்பற்றி...!

1947-க்குப் பிறகு வெள்ளையன் இருந்தபோது சுதந்திர தாகம் விடுதலை வேட்கை என்று எந்த அளவிற்கு சொல்லிக் கொண்டிருந்தார்களோ அதிலே சிறிதும் குறையாத தன்மையில் வெள்ளையன் வெளியேறி

யதற்குப் பிறகும் அந்த தாகம் இருந்து வந்தது பல்வேறு இடங்களில் அது எப்படி வெளிப்பட்டது என்ருல் வெள்ளையன் இருந்த நேரத்தில் அவனை விரட்டுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட சூட்டையும் உத்வேகத்தையும்விட மிக அதிகமான தன்மையில் ஒருபடி அதிகமான தன்மையில் மொழி வழி மாநிலக் கோரிக்கை தென்பட்டது. கோரிக்கைக்காக நடைபெற்ற கிளர்ச்சிகளில் தென்பட்டது. சம்யுக்த மகாராஷ்டிரசமிதியினுடைய செயலாளர் திரு. தேசாய்ப் பற்றி சொல்லும்போது உங்கள் உள்ளத்தில் ஒருபடபடப்பு இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

தரமான கிளர்ச்சி

பம்பாயை தலைநகராக கொண்ட மராட்டியம் வேண்டும் என்று மராட்டியத்தில் பெரும் கிளர்ச்சியை நடத்தியது சம்யுக்த மகாராஷ்டிர சமதி. இதிலே பல கட்சிகள் உண்டு Peasants & Workers Party அதில் அங்கம் வகிக்கின்றது. பி. எஸ் பி. கட்சி அங்கம் வகித்தது. பல்வேறு கட்சிகளும் சேர்ந்து சம்யுக்த மகாராஷ்டிரம் வெண்டும் என்று கிளர்ச்சிகள் செய்தார்கள். பல துப்பாக்கிப் பிரயோகங்களையும், அடிதடிப் பிரயோகங்களையும், சிறை வாசங்களையும் பொருட்படுத்தாமல் ஏற்கனவே வெள்ளையனை விரட்டுவதற்கு நடத்தப்பட்ட ,கிளர்ச்சிகளில் சற்றும் குறையாத தரத்திலே குறையாத தன்மையிலே அந்தக் கிளர்ச்சிகளை நடத்தினுர்கள்.

இனி அரைக்கணமும் தமிழர்களுடன் ஒன்ருக வாழமுடியாது. இன்றே ஆந்திரத்தைப் பிரித்துக் கொடு அல்லது நான் மரிப்பேன் என்று உண்ணுவிரதம் இருந்த பொட்டி ஸ்ரீராமுலுவை அதற்குள் நீங்கள் மறந்திருக்க முடியாது. அவருடைய மரணத்திலே பிறந்த தெலுங்கு தேசியம், ஆந்திர தேசியம் நேருவி

னுடைய கையைத் திருகி ஆந்திர மாநிலத்தைப் பிடுங்கிக் கொண்டதையும் நாம் பார்த்தோம்.

ஒழுங்காக கமிஷன் அமைத்து குழு நியமித்து பரிசீலித்து பல்வேறு பிரச்சினைகளை ஆய்ந்து பார்த்து முடிவு சொல்வதற்கு கூட அவகாசம் தராமல் கையைத் திருகி பிடுங்கி ஆந்திர மாநிலத்தை அவர்கள் பெற்றார்கள். அந்த மிடுக்கும், அந்த வேகமும் எதைக் காட்டுகின்றது என்பதை நாம் யோசித்து பார்க்க வேண்டும்.

அசாமில் நடந்தவை!

அசாமில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் வருந்தத் தக்கதுதான், வேதனைக்குரியதுதான் என்றாலும், அந்த நிகழ்ச்சிகளுக்குப் பின்னால் இருக்கின்ற உணர்ச்சிகள் என்ன என்று உங்களை நான் கேட்கிறேன் ? அசாமில் இருக்கும் மக்களுக்கு திடீரென்று ஒரு உணர்ச்சி, தோன்றியது. அசாமில் அசாமிய மொழிக்குத்தான் முதலிடம், வங்காளிகள் நம்மை விட எவ்வளவு புத்திசாலிகளாக இருந்தாலும் இங்கு வந்து அவர்கள் கொட்டமடிப்பதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பது அசாமிய மக்களின் தன்மானத்திற்கு இழுக்கு என்று கருதி விரும்பத் தகாத பல காரியங்களிலே அவர்கள் ஈடுபட்டார்கள். வங்காள மொழிக்கும் அசாமிய மொழிக்கும் போட்டி, அதனால் மோதுதல் இழப்புகள், கலவர நிகழ்ச்சிகள் ? வங்காளத்தில் இருந்த அத்தனை கட்சிகளும், ஆட்சிப்பீடம் ஏறி இருக்கும் காங்கிரஸ் கட்சியிலிருந்து முதுமை வயதிலே வங்காளத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற டாக்டர் பி. சி. ராய் உள்பட எல்லோரும் பெரிய ஆவேசத்துடன் எதிர்க் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். அசாமில் நடைபெற்ற கிளர்ச்சிகளுக்கு எதிரொலியாக வங்காளத்திலே கடை அடைப்பும், அர்த்தாலும் நடைபெற்றன.

டாக்டர் பி. சி. ராயின் தாய் மொழிப் பேச்சு !

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் துர்க்காபூரில் நடக்கும்போது அதற்கு ஒரு சோகமான பின்னணியாக நிகழ்ச்சிகள் அங்கே நடைபெற்றன.

பி. சி. ராய் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள் வரிசையில் மிக முக்கியமாக வைத்து எண்ணத் தகுந்தவர். அந்த முது பெரும் கிழவர், அந்த கமிட்டிகூட்டத்தில் எழுந்து வங்காளமொழியில் பேசி இருக்கின்றார். எல்லோரும் வியப்படைந்தார்களே தவிர யாரும் வாயைத் திறக்கவில்லை.

காரணம் அந்தக் கமிட்டிக் கூட்டத்திலே வங்காள மொழி தெரியாதவர்கள் நிறைய பேர் உண்டு சாதாரணமாக ஆங்கிலத்தில் பேசுவார்கள். அல்லது இந்தியில் பேசுவார்கள். காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் அநேகமாக ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தவர் பி. சி. ராய் அவர்கள் திடீரென்று அன்று வங்காள மொழியிலே பேச ஆரம்பித்தார். பண்டித நேரு உள்பட எல்லோருமே அதை சோகமாக கேட்டுக் கொண்டிருந்தார்கள் காரணம் என்ன ?

பி. சி. ராய்க்குத் தெரியாதா, தன்னுடைய வங்காள மொழி காமராசருக்கும், சுப்ரமணியத்திற்கும், சாவன் அவர்களுக்கும் தெரியாது என்ற உண்மை. நன்றாகத் தெரியும். ஆனாலும் அவர் ஏன் வங்க மொழியில் பேசினார் என்றால் தன்னுடைய வாதங்கள் அவர்களுக்கு விளங்கா விட்டாலும் தன்னுடைய நிலை, தான் வங்காளி என்ற உணர்வோடு முழுக்க முழுக்க அரசியலில் இருக்கின்றேன். வங்காள மொழியில் உந்தபட்டு மக்களுடைய நலன்களையும் உரிமைகளையும் காப்பதுதான் தன்னுடைய அரசியல் என்ற நிலையை அவர்கள் உணர வேண்டும் என்பதற்காகவே அவர் வங்க மொழியிலே பேசினார்.

இந்திய தேசியம் எங்கே?

அன்றைக்குத் தான் பண்டித நேரு வெள்ளையன் வெளியேறிய பதினன்கு ஆண்டுகளிலேயே முதன் முறையாகச் சொன்னார். இந்திய தேசியத்தைக் காணேம். வங்கத்தில் வங்க தேசியமும், அசாமில் அசாமிய தேசியமும், மராட்டியத்தில் மராட்டிய தேசியமும் என்று இப்படி மொழி வழி தேசியங்கள் தலை தூக்கிக் கொண்டிருக்கின்றன, என்றார். தொடர்ந்து அவர் சொன்னர், "இந்திய அரசியலில் 'மொழி'க்கு இவ்வளவு பெரிய ஆதிக்கச் சக்தி இருக்கின்றது என்பது தெரியாமல் போய் விட்டது" என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

இன்றைக்கும் மாஸ்டர் தாராசிங் ஏற்றிருக்கின்ற உண்ணவிரதத்தைப் பற்றியும், அதற்கு என்று அவர் அமைத்துக் கொண்டிருக்கின்ற கோரிக்கைப் பற்றியும் பல விதமான விவாதங்கள் நடைபெறலாம். அதில் குறைநிறைகள் நிறைய இருக்கலாம். மேல் நோக்கமாக அதனைப் பார்க்கும்போது அந்த உணர்ச்சி, எதற்குப் பின்னல் இருக்கின்றது என்றல் மொழி உணர்ச்சி தான். மொழி உணர்ச்சியை வைத்துக் கொண்டு வேறு பல உணர்ச்சிகள் அதனுடன் இணைந்திருக்கலாம். மத உணர்ச்சிகள் இணைந்து இருக்கலாம். சீக்கியர்களுக்கும், இந்துக்களுக்கும் ஏற்பட்டு விட்ட பேதத்தினை பயன்படுத்திக் கொள்வதற்கு சில பேர் துணை நாடி இருக்கலாம்.

பஞ்சாப் மொழிவழித் தேசியம்

ஆனல் அதற்கு ஒரு உயிர்த் துடிப்பு எப்படி கிடைத்தது. எப்படி எல்லாப் பகுதிகளிலே இருக்கிற மக்களுடைய கவனத்தினை ஈர்க்கக் கூடிய ஆற்றல் அந்தக் கிளர்ச்சிக்குக் கிடைத்தது என்றல் அங்கு நியாயமான மொழி வழி உணர்ச்சிதான் தலை தூக்கி நிற்கின்றது என்பது புரியும்.

இத்தனை உண்மைகளையும் வைத்துப் பார்க்கும் போது மொழிவழி தேசிய உணர்ச்சி எல்லாப் பகுதி களிலேயும் ஏற்பட்டு வருகின்றது என்பது புலப்படும்.

அதைப் பார்த்து பயப்பட வேண்டியதில்லை. அதை ஒரு நோய் என்று கண்டு அரசியலிலே நாம் மிர ளத் தேவையில்லை பதைக்க வேண்டியதில்லை. விவ ரம் தெரிந்த நிலையில் தான் மக்கள் தேசிய உணர்ச்சி யைக் கொள்கின்றார்கள். அதுவும் அந்த தேசிய உணர்ச்சி யார் யாரை ஆட் கொள்கின்றது என்று பார்த்தால் அதற்கு உரிய இலக்கணப்படி எல்லோரை யும் ஆட்கொள்கின்றது,

ஆற்றுத் தண்ணீர் தினம்!

ஆந்திர ஆற்றுத் தண்ணீர் தினம் என்று கொண் டாடுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள் உள்பட கம்யூ னிஸ்டுகள் ஈராக எல்லோரும் சேர்ந்து ஆந்திரத்தில் அந்த தினத்தை கொண்டாடுகின்றார்கள்,ஏன் இப்படி? என்ன நெருக்கடி என்று நான் கேட்பேன்? ஆந்திரா விலே ஓடுகின்ற ஆற்றுத் தண்ணீர் வேறு யாருக்கும் பயன்படக் கூடாது அல்லது ஆந்திரத்திற்கே உரிமை யான ஆற்றுத் தண்ணீரை வேறு பல அண்மை நாடுகள் கொள்ளை அடிக்கத் திட்டமிட்டு இருக்கின் றன என்பதுதான் அந்தக் கோரிக்கையின் பின்னால் இருக்கின்ற உட்கருத்து. இதிலே எந்தக் கட்சியும் விதிவிலக்கு இல்லை. ஆந்திராவிலே இருக்கின்ற அத் தனை கட்சியும், பெரிய கட்சியான காங்கிரஸ் கட்சி, அகில இந்திய கட்சிகள் உட்பட அத்தனைக் கட்சிகளும் கைகோர்த்துக் கொண்டு 'தண்ணீர் தினம்' கொண் டாடுகின்றன.

அதேபோல் கேரளத்தில் இருக்கின்ற கேரளத் தலைவர்கள் என்றால் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் பி. எஸ். பி. கட்சித் தலைவர்கள், காங்கிரஸ் தலைவர்கள் இன்னும் அங்கே இருக்கின்ற பல்வேறு சின்னக் கட்சிகளின் தலைவர்கள்கூட கேரளத் தண்ணீர் கேர

ளத்திற்கும் இல்லாவிட்டால் அரபிக் கடலுக்கும்தான் சொந்தமே தவிர வேறு எந்த நாட்டுக்காரனுக்கும் பயன்படக்கூடாது என்று சொல்கிறார்கள்.

கோபம் வருகிறது, ஆனால்

அதைக் கேட்கும்போது நமக்கு கோபம் வருகிறது. நமக்குப் பயன்படக்கூடாது அரபிக் கடலில் விழட்டும் என்று நினைக்கின்றார்களே என்ன மோசமானஎண்ணம் என்று நமக்குத் தோன்றுகின்றது ஆனால் கேரளமண்ணில் அதைச் சொல்லித்தான் அரசியல்வாதி தெருவில் நடக்கலாம் என்றால் இந்த நிர்ப்பந்தத்தை உண்டு பண்ணியிருப்பது என்ன? அது மொழி வழி ஏற்பட்டிருக்கும் தேசிய உணர்ச்சிதான்

அதை அடையாளம் கண்டு கொள்வதற்கு பெரிய மனிதர்கள் பயப்படுகின்றார்கள். மறுக்கின்றார்கள் அதற்கு உரிய மரியாதையை அரசியலிலே கொடுத்து அங்கீகரித்துஅதனுடைய பாதுகாப்பிலே இருப்பதற்கு தலைவர்களுக்கு அச்சமிருப்பதனாலேயே அது இப்படிப் பட்ட அக்கிரமமான உருவங்களை மேற்கொண்டு வேதனையான நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருக்கின்றது.

அஞ்சத்தேவையில்லை!

ஆக நாம்யாரும் அதைக்கண்டு பயப்படத் தேவையில்லை. மொழி வழித் தேசியத்தை அடையாளம் கண்டு கொண்டு அங்கீகரிப்போம். அதற்குத் தர வேண்டிய மரியாதையைக் கொடுப்போம். அது நம்மைக் காக்கும் என்று இன்று த. தே. க. துணிவோடு குறிப்பாக தமிழ் மக்களுக்கும் பொதுவாக இந்தியாவில் உள்ள மற்ற எல்லோருக்கும் விண்ணப்பித்துக் கொள்கின்ற பெரிய பங்கினை அரசியலில் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இதை எதிர்ப்பவர்கள் சொல்கிற காரணம் என்ன? பயப்படுபவர்களுடைய உள்ளத்தின் அடித் தளத்தில்

இருப்பது என்ன என்று நீங்கள் பார்க்க வேண்டும். அது இரண்டு பகுதி ஒன்று நல்ல பகுதி. அந்த நல்லப் பகுதியினை நான் எடுத்துச்சொல்கிறேன் இந்தியா இன்றைக்கு ஒரு பெரியநாடாக இருக்கின்றது. இன்றைய உலகத்தில் ஒரு பெரியநாட ாக இருந்தால்அதற்கென்று சில வாய்ப்புகள் வசதிகள், பெருமைகள் இருக்கின்றன. ஏற்பட்டு விட்ட இந்தப் பெரிய அமைப்பை ஏன் உடைத்து, பிரிக்க வேண்டும், என்று எண்ணுகிருர்கள். மொழிவழி தேசிய உணர்ச்சி தலைதூக்கிவிட்டால் இந்தியா சின்ன பின்னமாகி விடும் என்றும் சிலர் கூறுகின்றனர். அது நல்லெண்ணத்தோடு பார்க்கின்ற சிலருடைய நிலை.

தவறு என்ன ?

அதிலே இருக்கின்ற தவறு என்ன வென்ருல் மொழிவழி தேசியத்தை அங்கீகரித்து விட்டால் இந்தியா உடைந்துதான் போகவேண்டும் என்ற உறுதியான முடிவிற்கு அவர்கள் வந்திருப்பதுதான் சரியல்ல. அடுத்தாற்போல் இந்தியா ஒன்ருக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்த நியாயமான மக்களுக்கு உரிய உணர்ச்சியை அடக்கி வைக்கக் கூடாது என்று நாம் கூறுகிறேம்.

இந்திய ஒற்றுமை, இந்தியா ஒருமைப்பாடு என்று சிலபேர் எதைக் கருதுகின்ருர் என்ருல் இந்திய துணைக் கண்டத்திலே ஒரு குறிப்பிட்ட மொழி பேசுகின்றவர்களுக்கு ஆதிக்கச் சலுகை கிடைப்பதைத்தான் அப்படிக்கூறுகிருர்கள். அதை பல கூட்டங்களில் நம்முடைய தோழர்கள் எடுத்துச் சொல்லி இருக்கின்ருர்கள். இந்தியாவில் நிறைவேற்றப் பட்டிருக்கின்ற அரசியல் சட்டப்படி சனத்தொகை விகிதாசாரப்படி தான் பாராளுமன்றம் அமைந்து இருக்கின்றது.

அந்த மத்திய சர்க்காரில்தான் அதிகாரங்கள் குவிந்திருக்கின்றன, :குவிந்தவண்ணமிருக்கின்றன.

ஜனத்தொகை அடிப்படையில் பாராளுமன்றம் அமைந்திருப்பதனுல்—ஒரு குறிப்பிட்ட மொழி பேசுகிறவர்கள் ஜனத்தொகையில் பெருத்திருக்கிருர்கள்; இந்தி மொழி பேசுகிறவர்கள். இந்தியாவில் பெருத்திருக்கிருர்கள்; 44 கோடி பேர் மக்கள் தொகை என்ருல் ஏறத்தாழ 14 கோடிப் பேர் இந்தி மொழி பேசுகிறவர்களிருக்கின்ருர்கள்; ஆக அவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற பிரதிநிதித்துவம் அதிகம். பிரதிநிதித்துவம் அதிகம் என்பதைவிட ஆதிக்கம் செய்கின்ற இடத்தில், அவர்களுடைய குரல் ஓங்கி நிற்கின்றது. அவர்களுடைய எண்ணம்தான் சட்டமாக மாறிக்கொண்டு வருகிறது.

ஆதிக்க இனம்

ஆக ஒரு குறிப்பிட்ட இனம் ஆக்கப்பட்டு ஏனைய தேசிய இனங்கள், ஜனத்தொகையில் குறைந்திருப்பதிஞலே இரண்டாந்தர நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் அவலமும் நீடித்துக்கொண்டிருக்கிறது. இதில் ஒரு குறிப்பிட்ட மொழிக்குக் கிடைத்து விட்டிருக்கிற ஆதிக்க உரிமையை அனுபவிக்கிறவர்கள் இந்திய ஒற்றுமை என்ருல் அந்த உரிமை நீடிப்பு என்று கருதிக் கொண்டு அவர்கள் பேசுகிருர்கள். ஆகவே அவர்களுக்கு அதில் சொந்தச் சுயநல எண்ணம் ஒன்று இருக்கின்றது. ஆக அவர்கள் சற்று முரட்டுத்தனமாகவும் மூர்க்கத்தனமாகவும் போராடுகின்ருர்கள். இவைகளை நாம் நன்ருக உணர்ந்துகொண்டால் தான் பல்வேறு அரசியல் அறிக்கைகளுக்கும் நிலைக்கும் அர்த்தம் தெரியும். சமீபத்தில் டில்லியில் கூடிய முதலமைச்சர்களுடைய மாநாடு ஒரு விசித்திரமான அமைப்பு, உள்ளபடியே நான் சொல்லுவேன் இந்தியாவில் அரசியல் அமளிகள் அதிகமாவதற்கே காரணம் இப்படிப் பட்ட—fancy விசித்திரமான அமைப்புகளில், தலைவர்கள் நாட்டம் கொள்ளுவதுதான்.

குழப்ப முயற்சி

பாராளுமன்றம் இருக்கின்றது சட்ட சபை இருக்கின்றது. இரண்டிற்கும் நடுவில் இப்போது என்ன நிலை என்றே தெரியாமல் பயங்கரமான திட்டக்குழு ஒன்று இருக்கிறது. அதனுடைய அதிகாரம் என்ன? பொறுப்பென்ன? யாருக்கு அவர்கள் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள்? என்ற விவரங்களே தெரியாமல் ஒரு பெரிய அமைப்பாகத்திட்டங்கள் தான் இருக்கின்றது. அதற்குப் பிறகு National Development Council என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. இத்தனைக்கு மிடையிலே ஒரு புதிய வழக்கத்தைப் பரிசோதித்துப் பார்க்கிறார்கள். முதலமைச்சர்களுடைய மாநாடு என்று ஒன்றைப் போட்டு அதனுடைய கருத்தை வைத்துக் கொண்டு அரசியலில் குழப்பங்களை உண்டுபண்ண ஒரு முயற்சி நடைபெறுகிறது.

யாருடைய கருத்து?

அந்த மாநாடு கூடுகிறது. கூடி எந்த எண்ணத்தை பிரதிபலிக்கிறது? மொழிவழி தேசிய உணர்ச்சி வளர்ந்து கொண்டிருப்பதை அது கண்டு, அதை அடக்குவதற்கு வழி வகைகளைக் காணவேண்டும் என்று அதில் கருத்தறிவிக்கிறார்கள்.

யாருடைய கருத்து அங்கே வலிமையாக இருக்கிறது என்றால், நான் ஏற்கனவே சொன்னதைப் போல, அதில் பெரும் பகுதி பிரதிநிதிகளுடைய கருத்துத் தான் வலிமையாக நிற்கின்றது.

ஏனைய பகுதிகளுடைய்ய பிரதிநிதிகள் அங்கே தலையை ஆட்டி விட்டு எப்படி நம் ஊருக்கு நம்மைக் கேட்காமல் இந்த வெள்ளம் வந்து விடும்! என்ற முரட்டுத் தைரியத்தில் மௌனமாக ஊருக்கு வருகிறார்களே தவிர அங்கே அவர்கள் எடுத்துப் பேசுவது இல்லை.

இங்கே வந்ததற்குப் பிறகு இன்னொரு மந்திரியை விட்டு, அது ஒரு யோசனை தானே ; அதைப் பற்றி நீங்கள் ஏன் அவ்வளவு கவலைப்படுகிறீர்கள், என்று நமக்குச் சமாதானம் சொல்லுகிறார்கள்.

ஆனால் யோசனை சொல்லப்பட்ட இடத்தில் மௌனம் தலைகாட்டியிருக்கிறது.

பயங்கர அமைப்பு

இது இன்றைக்கு ஒன்றும் ஆபத்தை உண்டாக்காமலிருக்கலாம். ஆனால், இது தொடர்ந்து நடைபெறுமேயானால் அது ஒரு பயங்கர அமைப்பாக மாறக்கூடும்!

இந்த அமைப்புகள் அத்தனையும் இன்றைக்குப்பாடுபடுவது எதற்காக என்றால் இந்தியாவினுடைய ஒற்றுமையைக் காப்பதற்கென்று உரத்த குரலிலே சொன்னாலும், ஏற்பட்டுவிட்ட, ஏற்பட்டுவருகின்ற, வளர்ச்சியடைந்து வருகின்ற, தேசிய உணர்ச்சியை, மொழிவழி தேசிய உணர்ச்சியை தலையிலே தட்டி அடக்கி ஒழிப்பதற்காகவே அவர்கள் இன்றைக்குப் பெரும் பரப்பரப்போடு கூடிக் கலைகின்றார்கள்.

பயமாக இருக்கிறதாம்!

அதனாலேதான் அதில் என்னென்ன பேசப்பட்டதென்றால் அதைப் படித்த நண்பர்களுக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன். பிராந்திய மொழிகளுக்கு முக்கியத்துவம் வேண்டும் அது நல்லது என்று கருதினோம். இப்பொழுது பிராந்திய மொழிகள் வெகு வேகமாக வளர்ச்சியடைவதைப் பார்த்தால் பயமாக இருக்கிறது என்று கூட வெளிப்படையாகவே ஒரு வாசகம் இருக்கிறது!

பிராந்திய மொழிகளுக்கு நாட்டு அரசியலில் முக்கியத்துவம் வேண்டும் என்று சொன்னோம். தமிழ் நாட்டில் தமிழில் ஆட்சி மொழி, போதனா மொழி; அவ்வள

வும் தமிழ் தான் என்று சொல்லும்போது உற்சாகத்தோடு சொன்னேம், ஆனுல் நாம் எதிர்பார்த்ததை விட எதிர் பார்க்காத வகையில் அந்த மொழி வெகு வேகமாக வளர்ச்சியடைகின்றது. அந்த வேகத்தைப் பார்த்தால் பயமாக இருக்கிறது என்று கூறுகிறார்கள்.

பிராந்திய மொழியும், பொது மொழியும்

என்ன பயம்? இந்த வேகத்தில் பிராந்திய மொழிகள் அனைத்தும் வளர்ச்சியடைந்துவிட்டால் பிறகு பொது மொழி என்ற ஒன்றிற்கு இடமிருக்காது. மிக அடக்கமாக பொது மொழி ஒன்றுக்கு இடமிருக்காது என்கிறார்கள். அதனுல் பிராந்திய மொழிகளின்வளர்ச்சியைத்தடைப்படுத்தவேண்டும் என்ற வாசகம் அதில் இருக்கின்றது.

தடைப்படுத்துவதற்கு மறுபடியும் ஆங்கிலத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால் இந்த வேகம் தடைபடும்போது ஆங்கிலம் அன்னிய மொழி என்று சுலபமாகச் சத்தம் போட்டு, அதைத் தூக்கியெறிந்து விட்டு, இந்தியைக் கொண்டுவந்து வைத்துக் கொள்ளலாம் என்ற கருத்தினை வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார்கள்.

தேவநாகரி லிபி

அடுத்தாற்போல இந்தியாவை ஒன்றுபடுத்துவதற்கு தேவநாகிரி லிபியை எல்லோரும் ஏற்றுக்கொள்ளலாம் என்று சொன்னுர்கள்.

இன்றைக்கு ராசேந்திரப் பிரசாத் அவர்கள் இடையில் நோய்வாய்ப்பட்டிருந்தவர்கள் குணமடைந்த பிறகு இந்திய அரசியலிலே புதியதோர் நோயை உண்டாக்கு

வதற்கு ஒரு அறிக்கை விட்டிருக்கின்றார். ஒன்று தேவ நாகரிலிபி அல்லது ரோமன்லிபி என்று சொல்லுகிறார். அவர்களுடைய ராஜ தந்திரம் இதுதான்.

இந்தியாவிற்கு ஒரு பொது மொழி வேண்டும் அல்லவா? அல்லவா? அல்லவா? என்று கேட்பார்கள்.

இளித்த வாயர்!...

எவனாவது இளித்தவாய்த் தனமாக ஏமாந்து போய் "ஆமாம், ஆமாம்" என்று சொன்னால், "எது பொது மொழி ஆக முடியும்?" ஏன் ஆங்கிலம் ஆகாதா?" என்று இவன் ஈனக் குரலில் கேட்பான். உடனே, ஆங்கிலம் எவ்வளவு தான் எழில் மிக்கதாயிருந்தாலும், அது அன்னிய மொழி உன்னுடைய சுயமரியாதை எங்கே? போயிற்று! ஒரு இந்திய மொழியை ஏற்பதற்குத் தயங்குகின்ற நீ, ஒரு அன்னிய மொழியையா ஏற்கின்றாய் சீ, விடு," என்று சொல்லி அவனை மயக்கி, மிரட்டி, குழப்பி அவர்களுடையதைக் கொண்டு வந்து தலையிலே ஏற்றிவிடுவார்கள்.

அதேபோல இன்றைக்கு ராசேந்திர பிரசாத் அவர்கள் நல்ல அமைதியான நிலையிலே இருந்து கொண்டு ரோமன் லிபி அல்லது தேவநாகரிலிபி என்று சொல்லுகிறார். சொன்னவுடன், சபலப்பட்டவர்கள், ஒரு பொது லிபி இருக்கட்டும், சரி ரோமன் லிபி இருக்கட்டும், என்று சொல்லிக் கொண்டு வெளியிலே வந்து விட்டால் அவனை அப்படியே இழுத்துக் கொண்டு போய் "ஆங்கில லிபி வேண்டும் என்று சொல்லுகிறாய் இந்தி லிபி கூடாது என்று சொல்கிறாய்? நீ இந்தியன் தானா? மனிதன் தானா? ஆசியக்காரன் தானா? நீ வெள்ளைக்காரனுக்கு வால் பிடிக்கிற பரம்பரையா? உன் சாதி குலம் என்னயென்ன? கோத்திரம் என்ன?" என்று அவனை மிரட்டி, குழப்பி அவனுடைய கையெழுத்தையே முதலிலேயே வாங்கிவிடுவார்கள்,

பின் இவனே கையெழுத்துப் போட்டுவிட்டான், என்று நம்மிடத்தில் காட்டிக் கொண்டிருப்பார்கள்.

இன்றைக்கு அதை ராசேந்திரப் பிரசாத் அவர்கள் மிக அமைதியான முறையில் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். ரோமன் லிபி அல்லது தேவநாகரி லிபி என்று.

தத்துவமே தவறு

முதலிலே தத்துவமே தவறு ஒரு லிபியிலிருந்தால் எல்லோரும் எல்லாவற்றிலும் ஒன்ருக இருப்பார்கள் என்று எதை வைத்துக் கொண்டு சொல்லுகிருர்கள்?

ரோமன் லிபி எத்தனை நாடுகளில் இருக்கின்றன. எத்தனை இனங்கள், மொழிகளில் இருக்கின்றன. அது யாரையும் ஒன்ருக்கி விடவில்லை. அதே போல் ஒரு மொழிக்குரிய ஒரு லிபியை முன்னிட்டு ஒரு நாட்டினுடைய ஒற்றுமையும், வேற்றுமையும், இல்லை என்பது நமக்குத் தெரிந்து இருக்கின்ற கணிசமான உண்மையாகும்.

இருந்தாலும் அதைச் சொல்வதற்கு காரணம் என்னவென்ருல் மறுபடியும் அந்த இடத்திற்கு வருகின்ருேம். குறிப்பிட்ட மொழியின் ஆதிக்கத்தினை நிலை நாட்டிவிட வேண்டுமென்று அவர்கள் அதைச் சொல்லிக்கொண்டு இருக்கின்ருர்கள்.

வாக்குறுதியும் நடவடிக்கையும்

ஒரு பக்கத்திலே முதலமைச்சர் நேரு அவர்கள் நமக்கு வாக்குறுதிகள் கொடுத்துக் கொண்டிருக்கின்ருர், இந்தி திணிக்கப்பட மாட்டாது. இந்தி பேசாத பகுதியிலுள்ள மக்கள் சரி என்று சொல்கின்ற வரை இந்தியை உங்கள் வாசற்படிக்கு அனுப்பமாட்டோம்.

பயப்படாதீர்கள். உத்தியோகத் துறையிலும் கட்டாயம் இருக்காது, படிப்பிலேயும் உங்களுக்குக் கண்டிப்பு இருக்காது எந்த நிலையிலேயும் இந்திப் படிக்காத திலுலே உங்களுக்கு எந்தவிதமான வசதிக்கேடும் இருக்காது என்று அந்தப் பெரிய மனிதர் அடிக்கடி சொல்கின்றூர். அவர் அப்படி சொல்லிக் கொண்டிருக்கின்ற நேரத்திலேயே பழுப்பு நிற காகிதங்கள் ஒவ்வொரு இலாகாவிற்கும் வந்துக்கொண்டிருக்கின்றன. நேற்று முன் தினம் பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். 1965-க்குப் பிறகு 45 வயதிற்கு குறைவான மத்திய சர்க்கார் இலாகாக்களில் உள்ள அலுவலர்களும் இந்தியைப் படித்து தேறி இருக்கவேண்டும் என்று பத்திரிகையில் வெளிவந்து இருக்கின்றது.

ஒவ்வொரு இலாகாவிற்கும் விடப்பட்டிருக்கின்ற சுற்றறிக்கை என்னவென்ருல் பலவாறு அலுவலாளர்கள் இந்தி வகுப்புக்கு வராமல் இருக்கின்ருர்கள். வராதது பெரும் குற்றம். பெரும் தண்டனைக்குள்ளாவார்கள் என்று எல்லா இலாகாவிற்கும் சென்ற மாதம் சுற்றறிக்கை உள்நாட்டு துறை அமைச்சர்களுடைய இலாகாவிலிருந்து போய் இருக்கின்றது

அவருடைய நாணயம்!

வெளியிலே பண்டித நேரு சொல்வது இந்தியை நாங்கள் திணிக்கமாட்டோம் என்பது.

நான் அவருடைய நாணயத்தை சந்தேகிக்காவிட்டாலும் அவருடைய திறமையை நான் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

அவர் நல்லது நியாயம் என்று கருதுவதினுலும் அவருடைய அமைச்சர்களே அந்த வழிக்கு கொண்டுவர முடியாமல் தத்தளிக்கின்ருர் என்று தான் அதற்குப் பொருள்.

எது எப்படி ஆனாலும் அவருடைய நாணயம் குறைந்தாலும், திறமை குறைந்தாலும் அதனாலே பாதிக்கப்படுபவர்கள் அவரைவிட நாமாக இருப்பவனாலே நாம் அதைப் பற்றி அடிக்கடி கவலை கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்தத் துறையில் நாம் இப்படி எல்லோரும் பேச்சுக்களை பேசி கொண்டு இப்படியே போய்க் கொண்டிருப்போமேயானால் இங்கிருக்கின்ற சில நண்பர்கள் தங்களுடைய ராஜதந்திரத்தைப் பயன்படுத்தி எப்படியும் வடக்கே இருக்கின்றவர்களுக்கு திருப்தி அளிக்கக் கூடிய வகையில் இந்தியை நெளித்து உள்ளே புக வைக்கிறார்கள்.

அதைப்பற்றி முத்தமிழ் மாநாட்டில் எல்லோருமே விரிவாகப் பேசினார்கள், நான் இங்கே பேசுவது அதைப்பற்றி அவசியமில்லாதது என்று சுறுக்கிக் கொள்கிறேன்.

அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் சட்ட சபையில் பேசும் போது சொன்னார், தாய் மொழி அல்லாத மூன்றாவது ஒரு இந்திய மொழியைக் கற்பது என்றால் 'அது எந்த இந்திய மொழியாகவும் இருக்கலாம்.' அது எந்த மொழி என்று தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு யாருக்கு உரிமை கொடுத்து இருக்கிறார்கள்? கல்வி இலாகாவைக் கண்டு நடுங்கிக் கொண்டு இருக்கின்ற தலைமை ஆசிரியர்களுக்கா அல்லது பிள்ளைகளைப் பெற்றவர்களுக்கா, பிள்ளைகளுக்கா? யாருக்கு அந்த உரிமை இருக்கின்றது?

உரிமை யாருக்கு?

தாய் மொழி அல்லாத மூன்றாவது இந்திய மொழியாக மராட்டிய மொழி, வங்கமொழி, தெலுங்குமொழி உருது மொழி என்று விரும்பக்கூடிய மொழி எதுவானு

லும் தேர்ந்தெடுத்துக் கொள்ளக் கூடிய உரிமை யாருக்கு அளிக்கப்பட்டு இருக்கின்றது? எப்படி அது நடை முறையில் வந்திருக்கின்றது என்பதையும் அவர் விளக்கிக் கூற கடமைப்பட்டு இருக்கிறார். நம் விருப் பம்போல எந்த மொழியையும் கற்கஅமைவதினுலேயே நமக்கு பெருங்கேடு காத்திருக்கின்றது என்று உணர்ந்து நாம் செயல்பட வேண்டியவர்களாக இருக் கின்றோம்.

அன்றும் இன்றும்

'தமிழ் நாடு தமிழருக்கே' என்று இன்று நாம் சொல்லும்போது முன்பு சொன்னதற்கும் இப்போது நாம் சொல்வதற்கும் மாறுபாடு என்னவென்றால் முன்னைய முழக்கத்தை கேட்டு மற்றவர்கள் சந்தேகப் பட நியாயம் இருந்தது. மற்ற நாட்டவர்களை எல்லாம் பகைத்துக் கொண்டு நாம் தனித்து நின்று மற்ற வர்கள் மீது நமக்கு இருக்கின்ற கசப்புணர்ச்சியை வெளிப்படுத்தும் முறையில் அந்த பழைய முழக்கம் இருந்தது. ஆனல் இன்று நாம் வகுத்துக் கொண்டிருக் கின்ற திட்டம் குறிக்கோள் தன்மை எப்படியிருக்கின்ற தென்றால் எங்களுடைய உரிமைகள்மீது எவ்வளவுக் கெவ்வளவு அக்கரையோடு நாங்கள் இருக்கிறோமோ அவ்வளவு அக்கரையோடு உங்களோடு கூட எங்களுடைய உரிமை கெடாத வகையில் சம அந்தஸ்துடன் நட்புறவு பாராட்டுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்ற நல்லெண்ணத்தினை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அதனுலே தான் திரு. தேசாய் இங்கு வர முடிகின்றது. அவ ருக்கும் நம்மிடத்திலே வெறுப்பு ஏற்படாததற்கு கார ணம் நாம் "நீங்கள் எங்களை ஆளுகின்றீர்கள்" என்று அனுவசியமாக குற்றம் சாட்டவில்லை.

வெறுப்பில்லை கசப்பில்லை

மராட்டியராய் இருந்தால் என்ன, வங்காளத்தினராய் இருந்தால் என்ன? எல்லோரும் வடநாட்டு துரோகிகள், வடநாட்டு வெறியர்கள், உங்களிடத்திலே இருந்து நாங்கள் விடுதலை பெறவேண்டும், உங்களுடைய காலடியில் கிடக்கின்றோம் என்று நாம் முரட்டுத்தனமாகச் சத்தம் போட்டால் அது அவர்களுடைய வெறுப்பையும் விரோதத்தையும் தான் வளர்க்கும்

ஆனால் இன்றைக்கு அவர்கள் நம்முடைய கொள்கையை ஒத்துக்கொள்ளாவிட்டாலும் கூட வெறுப்பில்லை, கசப்புல்லை, எந்த பரப்பளவு ஒத்துப்போக முடியும் என்ற வாய்ப்பினைக் காணுவதில் மிக நாட்டம் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் உணர முடிகின்றது.

அதே போல் வங்காளத்திலேயும், மற்ற இடங்களிலேயும் இப்படிப்பட்ட பிரச்சினைகளை பேசி பலரையும ஒன்று திரட்ட வாய்ப்பு இருக்கிறது. அதற்கு சற்று காலமானாலும் ஆகலாம். ஆனால் வழிமிகத் தெளிவாக இருக்கிறது என்பதினை ஒவ்வொரு சந்திப்பிலேயும் நம்முடைய தோழர்கள் கண்டு கொள்ள முடிகின்றது.

ஆகாஷ்வாணியா, வானொலியா?

அடுத்தாற் போல் இந்த மாநாட்டில் இன்னும் ஒரு சிறப்பு என்னவென்றால் சாதாரணமாக கட்சிகள் போராட்டத்திற்கு திட்டம் வகுக்கும் போது அந்த திட்டத்தின் வெற்றியைப் பற்றி கவலைப்படுவது அந்த திட்டத்திற்கு கர்த்தாக்கள் நாங்கள் என்று சொல்லி பெருமை பாராட்டிக்கொள்வது ஆகியவற்றில் தான் ஆர்வம் காட்டுவதாக இருப்பார்கள். இன்

ஞெருவருடைய கருத்தைக் கூட எடுத்துக் கொள்வார்கள், ஆனல் அவருக்கு அந்தப் பெருமை போகாமல் வெகு ஜாக்கிரத்தையாக பாது காத்துக் கொள்வார்கள். நம்முடைய கட்சிப் பிரதிநிதிகள் நேற்று முன் தினம் முத்தமிழ் மாநாட்டில் முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் கூறிய ஒரு யோசனையை நன்ருக பரிசீலித்து இன்றைக்கு ஒரு தீர்மானத்தைப் போட்டு இருக்கின்ருர்கள். அந்த தீர்மானத்தை சொல்லும்போது வானொலி என்று சொல்லிக் கொண்டிருந்ததை நிறுத்தி ஆகாஷ்வாணி என்று சொல்கிற அருவருக்கத்தக்க நிலை மாற வேண்டும். மாற்ற வேண்டுமென்று அடுத்தடுத்து பல பேர்கள் முயற்சி எடுத்து வருகிருர்கள்.

மாருமல் நிலை நீடிக்குமேயானல் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ரேடியோ கட்டணம்கட்டும் நாள் வரும் போது தமிழ் உணர்ச்சி கொண்டவர்கள் தமிழகத்தில் இருக்கின்றவர்கள் தங்களுடைய உறுதியைக் காட்டுவதற்கு எவ்வளவு பிடிவாதமாக கோரிக்கையில் நாம் இருக்கின்ருேம் என்று காட்டுவதற்கு நாங்கள் ரேடியோவிற்கு லைசென்சு கட்டணம் கட்டுவதில்லையென்று தீர்மானிககப் போகின்ருேம். அந்த இயக்கத்தைத் தமிழகத்தில் நடத்தப் போகின்ருேம். அந்த ரேடியோக்களை எடுத்து அவர்கள் ஏலம் விடட்டும். அதை எந்த மானமுள்ள தமிழன் வாங்குகிருன் என்று நாம் பார்க்கலாம். யார் யாரைத் தண்டிக்கிருர்கள். என்று நாமும் பார்க்கலாம். அதில் நாம் எவ்வளவு அழுத்தம் திருத்தமாக கொதிப்படைந்து இருக்கின்ருேம் என்று விளக்குவதற்காக பிறர் சொன்னது என்று ஒதுக்காமல் அதையே ஒப்பு கொண்டு அந்தத் தீர்மானம் இன்று கூடிய பிரதிநிதிகள் மாநாட்டில் நிறைவேற்றியிருக்கின்ருேம்—கட்சி இந்தக் காரியத்தை செய்ய முன்வந்திருக்கின்றது என்ருலும் இதைக் கட்சிக் காரியமாக்காமல் இதில் பலபேருடைய ஒத்தாசையும் பெற்று மாபெரும் தமிழர் இயக்கமாக

நடத்தவேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். இன்று பல்வேறு காரணங்களால் நம்மோடு மனமாச்சரியம் கொண்டு இருப்பவர்கள்—கோபப்பட்டு இருப்பவர்களைக் கூட நாம் இதற்காக அழைக்க முடியும் என்றும், அழைக்க வேண்டும் என்ற விருப்பம் ஒரு பக்கம் இருப்பதோடு அழைப்பதிலே வெற்றி காணுவோம் என்னும் நம்பிககை உண்டு. ஏன் என்ருல் அப்போது ஜனவரி மாதம் தேர்தல் நெருங்கி வரும் நேரம். அதற்குள்ளாக அவர்கள் ஒரு உண்மையை புரிந்து கொள்வார்கள். இந்தக் கட்சியை அழிக்க முடியாது என்ற பெரிய உண்மையை புரிந்து கொள்வார்கள். ஆக அடுத்த கட்டம் அட்ஜஸ்மெண்டு என்ற கட்டம்தான் என்ற உண்மையும் உங்களுக்குத் தெரியும். அதை நாம் தேர்தலிலேயே பார்க்கின்றோம். 5 வருடங்கள் இன்னொரு கட்சியை அழிப்பதற்கு ஒரு கட்சி முழுமூச்சாக ஈடுபட வேண்டியது.

காய்ச்சல் !

முயன்று அதில் தோற்று தேர்தல் திடீரென்று வந்துவிட்டால் நம்முடைய விரோதம் இருக்கட்டும். பிறகு அதைப் பின்னுல் பார்த்துக் கொள்ளலாம் என்று வருகின்ற மனப்பான்மை அரசியலிலே சர்வ சாதாரணமானது ஆகும். ஆகவே ஜனவரி மாதத்திற்குள் இந்தக் காய்ச்சல் குறைந்துவிடும். நண்பர்கள், நண்பர்களாவதற்கு முயல்வார்கள், தனிக்கருத்தை உடையவர்களாக இருந்தாலும் இப்படிப்பட்ட காரியத்தில் தங்களுடைய ஒத்துழைப்பை கொடுக்க முன்வருவார்கள் என்ற நம்பிக்கையும்கூட நாங்கள் இங்கு தெரிவித்துக் கொள்கின்றோம். ஏன், இன்னும் தமிழ் தேசியக் கட்சியைப் பொருத்த வரையில் உள்ளபடியே நான் சொல்லுவேன்.

வறுமையும் செல்வமும்!

இந்தக் கட்சியினுடைய வளர்ச்சியின் ஒன்றுக்காகவே நல்லதைச் செய்வது அல்லது கெட்டதைச் செய்வது என்ற மனப்பான்மை எவருக்கும் கடுகளவும் இல்லை. நம்முடைய கட்சி நாட்டிலே சில நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கு கருவியாக இருந்தால் போதும். அதில் நமக்குக் கிடைக்கிற விளம்பரத்தை விட, கிடைக்கிற உள்ளத் திருப்தியே பெரிது என்ற கருத்தினை கொண்டவர்கள்தான் இன்று கட்சியில் நிறைந்திருக்கிறார்கள். ஆகவே இன்று பல்வேறு சூழ்நிலைகளுக்கு நடுவிலேயும், இந்த மாநாடு எப்படி நடைபெறுகிறது என்பதை எனக்கு முன் பேசிய செழியன் குறிப்பிட்டார்கள். அவர்கள் தரித்திர சூழ்நிலை என்று சொன்னார்கள். மிகைப்படுத்திச் சொன்னார். தரித்திரம் என்பதும், செல்வம் என்பதும், நாம் எதை விரும்புகிறோம், எதை பெரிதாக மதிக்கிறோம் என்பதைப் பொறுத்ததே தவிர, தரித்திரம் செல்வம் என்பதற்கு எல்லோருக்கும் உரிய நிலையான பொருள் இருப்பதாக நான் கருதவில்லை. ஒருவன் பணத்தைப் பெரிதென்று கருதினால் அது நிறைய இருந்தால் செல்வம். இல்லாவிட்டால் தரித்திரம், ஒருவன் நல்ல தொண்டாற்றிக் கிடைக்கக்கூடிய மனநிறைவைப் பெரிதென நினைத்தால் அதுகிடைத்தால் செல்வம், கிடைக்காத நேரத்தில் தரித்திரம். இதில் நம்மைப் பொறுத்தவரையில் நாம் மிகுந்தசெல்வத்தோடுதான் இருக்கிறோம். ஏனென்றால் இன்று கட்சியின் பணப்பெட்டியில் என்ன இருக்கிறது என்ன குவிகிறது என்று நாம் பார்க்கவில்லை. இன்று கட்சியின் கொள்கை, நடத்தை, தொண்டு எந்த அளவு எல்லோரையும் ஈர்க்கிறது. எல்லாருடைய நல்லெண்ணத்தையும் பெறுகிறது என்பதைத்தான் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதில் நாங்கள் தாங்க முடியாத அளவு பெருஞ் செல்வத்தைப் பெற்றிருக்கிறோம்; என்ற மனநிறைவு இருக்கிறது!